செ. வெ. எண். 337 நாள்.13.06.2012

# செய்தி வெளியீடு
## தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு கடல்சார் வாரியம் தொடக்கத்தில் 11 சிறுதுறைமுகங்கள் வாயிலாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 40 ஆயிரம் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாண்டு வந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் அரசு வகுத்தளித்த சிறுதுறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கை, தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் மற்றும் வணிகத் துறைமுகங்களுக்கு அனுமதி வழங்கும் முறைகளை நிர்ணயித்ததுடன், துறைமுக வசதிகளின் முழுமையான பயன்பாட்டிற்கு ஏதுவாக தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் இதர வணிக சரக்குகளைக் கையாளுவதற்குரிய அனுமதிகளையும் வழங்கிட வழிவகுத்தது.

கடந்த ஆண்டில், 22 சிறுதுறைமுகங்கள் வாயிலாக சுமார் 16.11 இலட்சம் மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டு, அதன் மூலம் துறைமுக மற்றும் சரக்கு தீர்வையாக சுமார் 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. இத்துடன் இதர வருவாய் இனங்களையும் சேர்த்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மொத்த வருவாய் 27 கோடியே 84 இலட்சம் ரூபாய் என உயர்ந்துள்ளது.

இத்தொகையிலிருந்து தமிழக அரசுக்கான நில வாடகை பங்குத் தொகையாக 4 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களிடம் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சார்பில் அதன் தலைவரும் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் 02–12–2011 அன்று வழங்கினார்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் தனது புதிய தலைமை நிர்வாக அலுவலகக் கட்டிடத்தை, அடையாறு கிரீன்வேஸ் சாலையில், சுமார் ரூ.15 கோடி செலவில் கட்டி வருகின்றது. இக்கட்டிடம் தரை தளம் மற்றும் நான்கு மாடிகளை கொண்டது. இக்கட்டிடப் பணிகள் தற்போது நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் யாவும் அக்டோபர் 2012க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கட்டிடத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது தளங்களை தமிழ்நாடு கடல்சார் வாரியம் உபயோகப்படுத்தும். மேலும், முதல் மற்றும் இரண்டாவது தளங்களை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையமும் எடுத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் மற்றும் வாரியத்தின் தலைவரான மாண்புமிகு. திரு. எடப்பாடி. கே. பழனிசாமி அவர்கள் 13.06.2012 அன்று இக்கட்டிடப் பணிகளை ஆய்வு செய்தார்.

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை